**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.673/2024 நாள்- 18.02.2026

**பி.வா.சா.1. பழனிச்சாமி**

**குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்**

நான் தற்போது வேலாயுதபுரம் தேவேந்திர குல சமுதாயத்தின் தற்போதைய தலைவராக இல்லை என்றால் இல்லை. 3 வழக்குகளில் நான் தனிப்பட்ட முறையில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 3 வழக்குகளில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைகளில் சமுதாயத்தின் சார்பாக கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். வாதி ேஹமாமாலினி தாக்கல் செய்த வழக்குரையை படித்து பார்க்கவில்லை. எங்கள் சமுதாயத்தின் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. நான் சமுதாயத்தின் சார்பாக தான் சாட்சியம் அளிக்கிறேன். சமுதாயத்தின் சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு தீர்மானம் போட்டு அதிகாரம் வழங்கவில்லை. தற்போது எங்கள் சமுதாயத்தின் தலைவராக வடிவேலு என்பவர் இருந்து வருகிறார். எங்கள் சமுதாயத்தின் சார்பாக என்ன நிகழ்ச்சி நடந்தாலும் வடிவேலு கூறி தான் நடக்கும் என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தின் சார்பாக என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. ஊர் நிர்வாகிகளுக்கு தான் தெரியும். வாதி கோயில் பூஜை பாத்தியம் எனக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் எங்கள் ஊரில் மொத்தம் 250 தலைக்கட்டுகள் உள்ளது என்றால் சரிதான். குளத்துபள்ளர் வகையறா சுமார் 150 குடும்பங்கள் இருக்கும். ஊரை சுற்றி உள்ள கண்மாயை பராமரிப்பதற்கும் தண்ணீர் திறந்துவிடுவதற்கும் 150 குடும்பங்கள் தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதற்காக விவசாயிகள் வழங்கும் நெல்லை அந்த வருடம் யார் பராமரிக்கிறார்களோ அவர்கள் பெற்றுக் கொள்வார்கள். நான் 8 வயது இருக்கும் போதே எஸ்டேட் சென்று விட்டேன். அதன் பின்பு 1980 ம் ஆண்டிலிருந்து நான் ஊரில் தான் குடியிருந்து வருகிறேன் வாதியும் வேலாயுதபுரம் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான் வாதி குளத்து பள்ளர் வகையறாவை சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதியின் பாட்டியை எனக்கு தெரியாது. வாதியின் அம்மாவை தெரியும். கோவில் பெயரில் வேறு ஏதாவது நிலம் உள்ளதா என்று எனக்கு தெரியுமா என்றால் 4, 5 ஏக்கர் உள்ளது அந்த இடத்தை வெளியில் உள்ள நபர்கள் கோவிலுக்கு தானமாக கொடுத்தார்கள். 1929 ஆண்டிலேயே வழக்கு தாவா கோயிலை குளத்துபள்ளர் வகையறாவை சேர்ந்த பெண்கள் தான் பூஜை செய்ய வேண்டும் என்று நீதிமன்றத்தில் தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது தற்போது வரை

குளத்துபள்ளர் வகையறாவை சேர்ந்த பெண்கள் தான் பூஜை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1. 2004 ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக அழைப்பிதழ் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1- மற்றும் பி.வா.சா.ஆ.2- ல் சங்கிலியாண்டி கோவில் வேலாயுதபுரம் தேவேந்திர குல சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்று வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். பி.வா.சாஆ.5-ல் தேவேந்திரகுல சமுதாயம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3-ல் 2 வது போட்டோவை தவிர மற்ற போட்டோக்களில் தேவேந்திர குல வேளாளர் சமுதாயம் என்று வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 தாவா கோவிலுக்கான பட்டா இல்லை என்றால் சரிதான் கோவிலுக்கு அருகில் உள்ள கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடம் என்று தான் உள்ளது தேவேந்திர குல சமுதாயம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 டிரஸ்டி சங்கிலியாண்டி கோவில் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தில் இருந்து எந்த அறக்கட்டளையும் நிறுவப்படவில்லை என்றால் சரிதான் வாதியும் மற்றும் சிலர் சேர்ந்து 10 வருடங்களுக்கு முன்பாக கோவிலை நிர்வாகம் செய்வதற்கு அறக்கட்டளை ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். தாவா கோவிலில் அனைத்து சமூகத்தினரும் சாமி கும்பிடுவார்கள் என்றால் சரிதான். தாவா கோவிலில் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்களும் குலதெய்வமாக சாமி கும்பிட வருவார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் வரிவசூல் செய்து தாவா கோவிலில் சாமி கும்பிடுவார்களா என்று கேட்டால் வரிவசூல் செய்வார்களா என்று எனக்கு தெரியாது. ஆனால் சாமி கும்பிடுவார்கள். எங்களை போன்று வேறு ஊரைச் சார்ந்தவர்களும் ஒரு குறிப்பிட்ட நாள் மொத்தமாக வந்து சாமி கும்பிட்டு செல்வார்கள். தாவா கோவிலை நாங்கள் பராமரித்து வருகிறோம் செலவு செய்து வருகிறோம் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. தாவா கோவிலை நிர்வாகம் செய்வதற்கும், பூஜை செய்வதற்கும் குளத்துபள்ளர் வகையறா பெண்களுக்கும் மட்டும் தான் உரிமை உண்டு என்று சொன்னால் சரிதான். பூஜை செய்வதற்கான பூசாரியை நியமனம் செய்யும் உரிமை குளத்து பள்ளர் வகையறாவை சேர்ந்த பெண்களுக்கு தான் உரிமை உள்ளது என்றும் எங்கள் சமுதாயத்தை சேர்ந்த ஆண்களுக்கோ மற்ற வகையறாவை சேர்ந்த வகையறாவிற்கோ உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா கோவிலுக்கும், வேலாயுதபுரம் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும்

குளத்துபள்ளர் பெண்களால் நிர்வாகம் செய்யப்பட்டு பூஜை காரியங்கள் நடத்தி வரப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.